


RNI. No.: TNTAM/2022/82166

# செய்தி நேரம்

SEITHI NERAM


மாதமிருமுறை இதழ்




மலர் : 4 இதழ் : 20 | 2025 டிசம்பர் 16-31 | 4 பக்கங்கள் | விலை : ரூ. 10/-

# மேகதாது அணை விவகாரம்

## தமிழக அரசு மேல்முறையீடு... எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு...









காவிரி நதி நீர் விவகாரத்தில் தமிழ்நாடு - கர்நாடகா மாநிலங்கள் இடையே நீண்ட காலமாக பிரச்சனைகள் எழுந்து வருகின்றன. நீதிமன்றங்கள் வழக்கு தொடர்ந்தும், ஆணையங்கள் அமைக்கப்பட்டும் தீர்வு எட்டப்படவில்லை. இந்நிலையில், மேகதாதுவில் அணை கட்ட கர்நாடகா அரசு தீவிரம் காட்டி வருகிறது.

அதன்படி, மேகதாது திட்டத்தை அமல்படுத்த 30 பேர் கொண்ட அதிகாரிகள் குழு அமைத்து கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், மேகதாது அணை திட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மீண்டும் மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு - கர்நாடகா இடையே கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக காவிரி நதி நீர் பங்கீட்டில் பஞ்சாயத்து நிலவி வருகிறது. கர்நாடகா அரசு மேகதாதுவில் அணை கட்டுவதற்காக நீண்ட வருடங்களாக முயற்சித்து கொண்டிருக்கிறது. கர்நாடகாவில் காங்கிரஸ், பாஜக யார் ஆட்சியில் இருந்தாலும் இந்த விவகாரத்தில் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாக புகார் உள்ளது.

இந்நிலையில், கர்நாடக விவசாயிகளின் உயிர்நாடியாக உள்ள காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடகா மாநிலம், ராம்நகர் மாவட்டத்தில் மேகதாதுவில் புதிய தடுப்பணை கட்ட அம்மாநில அரசு முடிவு செய்தது. இதுதொடர்பாக விரிவான திட்ட அறிக்கையை கடந்த 2018 ஆம் ஆண்டு மத்திய நீர்வளத் துறையிடம் சமர்ப்பித்துள்ளனர். தமிழ்நாடு மட்டுமல்லாமல் கேரளா, புதுச்சேரி உள்ளிட்டோரும் மேகதாதுவில் அணை கட்ட எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேகதாதுவில் அணை கட்டுவதற்கான தீவிர நடவடிக்கைகளை கர்நாடகா அரசு சார்பில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. காவிரியின் குறுக்கே அணை கட்டப்பட்டால் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் என்று கூறி தமிழக அரசு தொடர்ந்து போராடி வந்தாலும், அணை கட்டுவதில் கர்நாடக அரசு கடுமை காட்டி வருகிறது.

இதனிடையே, மேகதாதுவில் அணை கட்டுவதற்காக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யுமாறு உச்சநீதிமன்றம் கர்நாடாக அரசுக்கு அனுமதி கொடுத்ததோடு, தமிழக அரசின் கருத்தைக் கேட்கவும் உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில், மேகதாது திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் வகையில், 30 பேர் கொண்ட அதிகாரிகள் குழுவை கர்நாடக அரசு அமைத்து உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், மேகதாது அணை திட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மீண்டும் மனு தாக்கல் செய்துள்ளது. இதுகுறித்து, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: ‘காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் ஒரு பெரிய அணை கட்ட கர்நாடக அரசு முயற்சித்ததை எதிர்த்து, தமிழ்நாடு அரசு 2018 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கும், அதனுடன் தொடர்புடைய பிற வழக்குகளும் 13.11.2025 அன்று விசாரணைக்கு வந்தன.

மேலும், மத்திய நீர்வளக் குழுமத்திடமும் மேகதாது அணை எவ்வாறு தமிழகத்திற்கு பாதகமாக இருக்கும் என்பதையும், உச்சநீதிமன்ற ஆணைக்கு முரணாக இருக்கும் என்பதையும் குறிப்பிட்டு, ஒரு விரிவான மனுவை 09.12.2025 அன்று அளித்துள்ளது. இவ்வாறு தமிழ்நாடு அரசு காவிரி டெல்டா விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. கர்நாடக அரசின் முயற்சியை தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது‘ என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேபோல் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தை பாலைவனமாக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு கர்நாடகத்தை ஆளும் காங்கிரஸ் அரசு செயல்படுவது தொடர்கதையாக உள்ளது. காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட திட்ட அறிக்கையை தயாரித்து வரும் கர்நாடக அரசு, அணையை கட்டுவது குறித்து அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய 30 பேர் கொண்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவை அமைத்திருப்பதாக செய்திகள் வருகின்றன.

தமிழக மக்களின் ஜீவாதார பிரச்சனையான காவிரி விவகாரத்தில் காவிரி மேலாண்மை ஆணையத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு தமிழகத்தின் சார்பில் வலிமையான வாதங்களை வழக்கறிஞர்கள் மூலம் எடுத்து வைக்காமல், ‘ஏனோ தானோ‘ என்று செயல்பட்டதால் இந்த துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் இருக்கும் போதெல்லாம் காவிரி நீர் பிரச்சனையில் தமிழகத்தின் உரிமைகளை கர்நாடகத்திற்கு விட்டுக்கொடுப்பதே வாடிக்கையாகி விட்டது. திமுக தலைமை தங்களுடைய சுயநலத்திற்காக, தங்களின் குடும்பத் தொழிலை பாதுகாக்க கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு லாலி பாடும் போக்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. திமுக-வின் இந்த துரோகச் செயல் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

இனியாவது தமிழக மக்களுக்கு துரோகம் செய்யும் நினைப்பை கைவிட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, காவிரியில் தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்துகிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தமிழக கட்சிகள் ஒன்றிணைந்து விருப்பு வெறுப் பற்ற போக்கை தவிர்த்து தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மேகதாது அணை கட்டுவதை நிறுத்த வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.









### தமிழ்நாடு அரசின்

# மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்!

## ஒரு சிறப்பு பார்வை



ஏழை குடும்பத்தை சேர்ந்த பெண்களின் உயர்க் கல்விக்காகவும், திருமணத் திற்காகவும் நிதியுதவி வழங்கும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தி இருக்கும் மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் ஆகும்.

திருமணம் என்பது ஒவ்வொரு பெண்களின் வாழ்க்கையிலும் நடைபெறும் அற்புத நிகழ்வு ஆகும். ஆனால், ஏழை குடும்பத்தை சேர்ந்த பெண்களுக்கு திருமணம் ஒரு கனவாகவே இருந்து வருகிறது. ஏனென்றால், திருமணம் என்று சொன்னாலே செலவு தான் கண் முன்னே வந்து நிற்கும்.

பொதுவாக சாதாரண முறையில் திருமணம் செய்ய வேண்டுமென்றாலும் கூட இந்த காலத்தில் லட்சக்கணக்கில் செலவு செய்ய வேண்டியது இருக்கிறது. இவ்வாறு திருமணத்தின் போது நிதி நெருக்கடியை சந்திக்கும் குடும்பங்களுக்கு உதவும் வகையில் தமிழக அரசு பல்வேறு திருமண உதவித் திட்டங்களை செயல் படுத்தி வருகிறது.

ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு காரணத்தின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. அந்தவகையில், ஏழை குடும்பத்தை சேர்ந்த பெண்களின் கல்விக்காகவும் திருமணத் திற்காகவும் நிதியுதவி வழங்கும் நோக்கத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட திட்டமே மூவலூர் இராமமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்.

ஏழை பெண்களின் திருமணத்திற்கு ரூ.25,000 மற்றும் ரூ.50,000 உதவித்தொகையும், தாலி செய்வதற்காக 8 கிராம் எடையுள்ள 22 காரட் தங்க நாணயமும் உடன் வழங்கப் படுகிறது.

பெண்களுக்கான கல்வி கிடைக்காமலும், குழந்தை திருமணங்களும் பரவலாக இருந்த காலக்கட்டத்தில், அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைக்காகவும், படிக்கக் கூடாது என்று தடுக்கப்பட்ட பெண்களுக் காவும் குரல் கொடுத்தவர் இராமாமிர்தம் அம்மையார். இவரின் நினைவாகவே, அன்றைய முதல்வராக இருந்த மு.கருணாநிதி 1989 ஆம் ஆண்டு மூவலூர் இராமமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

இத்திட்டம் மூலம் ஏழை பெண்களுக்கு திருமணத்தின் போது ரூ.10,000 வரை நிதியுதவு வழங்கப்பட்டது. பின்னர், 2009 ஆம் ஆண்டு இந்த உதவித்தொகை ரூ.25,000 ஆகவும், 2011 ஆம் ஆண்டு ரூ.50,000 ஆகவும் உயர்த்தப்பட்டது. மேலும், இத்துடன் தாலிக்கு 4 கிராம் தங்கமும் வழங்கப்பட்டது. பின்னர், 2016 ஆம் ஆண்டு இது 8 கிராமாக வழங்கப்பட்டது.

ஏழை பெண்கள் பத்தாம் வகுப்பு படித்தவராக (தேர்ச்சி அல்லது தோல்வி) இருக்கும் பட்சத்தில் இந்த திட்டத்தின் கீழ் அவர்களின் திருமணத்திற்காக 25,000 ரூபாயும், தாலிக்கு 1 சவரன் (8 கிராம்) தங்க நாணயமும் வழங்கப்படும். தனியார் தொலை தூரக் கல்வி மூலம் படித்து இருந்தால் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும். அதுவே, பழங்குடியினராக இருந்தால் 5ஆம் வகுப்பு படித்து இருந்தால் போதுமானது. வழங்கப்படும் மொத்த தொகையில் ரூ.15,000 மின்னணு பரிமாற்ற சேவை மூலமாக வழங்கப்படும். மீதமுள்ள ரூ.10,000 தேசிய சேமிப்பு சான்றிதழாக வழங்கப்படும்.

ஏழை பெண்கள் பட்டப்படிப்பு அல்லது பட்டயப் படிப்பு பயின்றவராக இருக்கும் பட்சத்தில் இந்த திட்டத்தின் கீழ் அவர்களின் திருமணத்திற்கு 50,000 ரூபாய் உதவித்தொகையும், தாலிக்கு 1 சவரன் (8 கிராம்) தங்க நாணயமும் வழங்கப்படும். மொத்த தொகையில் ரூ.30,000 மின்னணு பரிமாற்ற சேவை மூலமாக வழங்கப்படும். மீதமுள்ள ரூ.20,000 தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்படும். பட்டயப் படிப்பு எனில் தமிழக அரசின் தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவங்களில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

# E-Filling முறையை ரத்து செய்யக்கோரி

## சென்னை ஐகோர்ட் முன்பாக திரண்ட வழக்கறிஞர்கள்




நீதிமன்றங்களில் E-Filing முறையை ரத்து செய்யக்கோரி உயர் நீதிமன்றம் அருகே வழக்கறிஞர்கள் திரண்டு இன்று ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். வழக்கறிஞர்களுக்கு சிரமத்தையும், கால விரயத்தையும் ஏற்படுத்தி வரும் இ-ஃபைலிங் நடைமுறையை போதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தாமல் அமல் படுத்தக்கூடாது என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுனர்.

நீதிமன்றங்களில் இ-ஃபைலிங் முறை கட்டாய மாக்கப்படுவதை கண்டித்தும், அதற்கான கட்டமைப்புகளை செய்து கொடுத்த பின்பு நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியும், இ-ஃபைலிங் செய்வதற்கு ஏராளமான சேவை மையங்களை தொடங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் வழக்கறிஞர்கள் கடந்த டிசம்பர் 2 ஆம் தேதி முதல் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்னர். மேலும் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இ-ஃபைலிங் செய்யும் போது விரைவான இணைய வசதி இருத்தல் வேண்டும். அதனால், விவசாயம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளுக்கு என தனி செயற்கைக்கோள் தொடர்பு வசதி இருப்பது போல, நீதித்துறைக்கும் தனி செயற்கைக்கோள் தொடர்பை அமைத்தல் வேண்டும். இதேபோல், நீதித்துறையின் உள் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேவையான பணியாளர்களை வேலையில் அமர்த்த வேண்டும். இந்த வேலைக்கு என இன்றைக்கு 40 ஆயிரம் பணியாளர்கள் தேவைப் படுகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் கிட்டத்தட்ட 8 ஆயிரம் பணியாளர்கள் தேவைப் படுகிறார்கள். இதுபோல் பணியாளர்கள் அமர்த்தப்படும் போது தான், இ-ஃபைலிங் செய்யும் வேலை சுலபமாகும் என்பது வழக்கறிஞர்கள் தரப்பின் வாதம்.

போதிய உள் கட்டமைப்பு வசதிகளை ஏற் படுத்தாமல் இ-ஃபைலிங்கை நடைமுறைப்படுத்தக்கூடாது என வலியுறுத்தி இன்று சென்னை ஐகோர்ட் முன்பாக நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இ-ஃபைலிங் முறையை நடைமுறைப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து வழக்கறிஞர்கள் முழக்கம் எழுப்பினர்.

செய்தி மற்றும் விளம்பரம், சேகரிக்க சட்டமன்ற தொகுதி வாரியாக துடிப்புமிக்க இளைஞர்கள் தேவை!

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்

Cell: 9443852805, 9943483046

Email: seithineram@gmail.com

# கராத்தே விளையாட்டுக்கு தமிழக அளவில் அங்கீகாரம் வழங்க

## துணை முதல்வருக்கு கோரிக்கை




வீரக்கலை கராத்தே விளையாட்டுக்கு தமிழக அளவில் அங்கீகாரம் வழங்குமாறும், முதல்வர் கோப்பை போட்டியில் கராத்தே விளையாட்டை சேர்த்துக் கொள்ள மாண்புமிகு துணை முதல்வர் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கு கராத்தே வீரர்கள் வீராங்கனைகள் பாதுகாப்பு நலசங்கத்தின் தலைவர் தனசேகரன் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது;

தமிழகத்தில் சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு தொடர்ந்து அரசு பணிகளை வழங்கி வருகின்ற துணை முதல்வர் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழகத்தில் இருக்கும் ஐம்பது லட்சத்திற்கும் மேற்பட்ட கராத்தே வீரர்கள் வீராங்கனைகள் பயிற்சியாளர்கள் சார்பில் மணமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்

தமிழனின் வீரக்கலை கராத்தே விளையாட்டுக்கு தமிழக அளவில் அங்கீகாரம் வழங்குமாறும், முதல்வர் கோப்பை போட்டியில் கராத்தே விளையாட்டை சேர்த்துக் கொள்ள வேண்டுமாயும் கராத்தே பயிற்சியாளர்கள் சார்பில் இரு கரம் கூப்பி வணங்கி கேட்டுக் கொள்கின்றேன்

தமிழனின் பாரம்பரிய கலை கராத்தே விளையாட்டுக்கு அகில இந்திய அளவில் அங்கீகாரம் இருப்பதாக பொய் சொல்லி, அரசியல் பலத்தையும், பண பலத்தையும் வைத்துக் கொண்டு தமிழகத்தில் இருக்கும் அப்பாவி ஏழை குழந்தைகளை ஏமாற்றி கோடி கணக்கில் ஊழல்கள் செய்து கொள்ளை அடித்து வருகின்ற தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் கராத்தே டோ அசோசியேஷன் TSKA கராத்தே சங்கத்தின் தலைவர் ஜேக்கப் தேவகுமார், செயலாளர் அல்தாப் அலாம் அவர்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கராத்தே பயிற்சியாளர்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்

# புகார் நேரம்



திருப்பத்தூர் அருகே பாச்சல் ஊராட்சியில் ஆசிரியர் நகர் பகுதியில் குப்பைகள், கோழி கழிவுகளை சாலையோரம் கொட்டுவதால், அந்தப் பகுதி வழியாகச் செல்லும் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் சிரமப்படுகின்றனர். எனவே குப்பைகளை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.



செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பெரும்பாக்கம் ஏரியில் தற்போது ஆகாயத்தாமரை அதிகமாக படர்ந்து காணப்படுகிறது. மேலும் அங்குள்ள பல பகுதிகளில் இருந்து கழிவுநீரும் இந்த ஏரியில் கலக்கிறது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் தெரிவித்தாலும் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக இல்லை. படர்ந்துள்ள ஆகாயதாமரையை அப்புறப்படுத்தவும், ஏரிக்கரையை பலப்படுத்தவும் துறை சார்ந்த அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# அரசு பள்ளி கட்டிடம் தரமற்று இருப்பதாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு

## பொறியாளர் குழு ஆய்வு



நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி கண்டிப்புதூர் அரசு பள்ளியில் கல்வி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.1.10 கோடி செலவில் 3 வகுப்பறைகளை கொண்ட கட்டிடம் ஒரு வருடமாக கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டுமான பணிகள் தரமற்று இருப்பதாக சமூக ஆர்வலர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதனை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி லட்சுமி நாராயணன் கட்டடத்தில் உறுதித் தன்மையை கட்டுமான முறைகள் ஆகியவற்றை தனியார் பொறியாளர்கள் குழுவைக் கொண்டு பரிசோதனை செய்து மூன்று வார காலத்தில் அறிக்கை அளிக்கும்படி மாவட்ட கலெக்டர் துர்கா மூர்த்தி நகராட்சி ஆணையாளர் பொறியாளர் கல்வி அதிகாரி ஆகியோருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அதன்படி தனியார் பொறியாளர் குழுவினர் பள்ளிக்கு வந்து புதிதாக கட்டப்பட்டு வரும் வகுப்பறையை கட்டிடத்தை ஆய்வு செய்தனர் இந்த ஆய்வின் போது தாசில்தார் பிரகாஷ் நகராட்சி ஆணையாளர் தயாளன் பொதுப்பணித்துறை பொறியாளர்கள் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர் நீதிமன்ற உத்தரவின்படி ஆய்வு செய்யப்பட்டதாகவும் ஆய்வின் முடிவுகள் அறிக்கையாக கலெக்டருக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் கட்டுமான பொறியாளர்கள் குழு தெரிவித்தனர்.

### திருச்சி அமிர்த வித்யாலயம் பள்ளியில் நடைபெற்ற

# அறிவியல் கண்காட்சி



திருச்சி ரெட்டை வாய்க்கால் அமிர்த வித்யாலயம் பள்ளியில் அறிவியல் கண்காட்சி (science Expo) நடைபெற்றது.

பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தங்கள் அறிவியலின் படைப்புகள் மற்றும் தமிழகத்தின் பாரம்பரிய வரலாறுகள், விவசாயம், கணிதம் மற்றும் விளையாட்டுத் துறையின் சார்பாக 30-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டன.

இதில் பல அரங்குகள் மாணவர்கள் மற்றும் பெற்றோர் களுக்கு மிகவும் வியப்பூட்டும் வண்ணம் அமைந்தது. சிறப்பு விருந்தினர் மற்றும் பள்ளியின் முதல்வர் திருமதி. உஷாராகவன் அவர்கள் துவக்கி வைக்க, மாணவர்கள் பெற்றோர்கள் என 600க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கண்டு களித்தனர்.

மாணவ, மாணவிகளின் தனிப்பட்ட திறமைகளை சிறப்பு விருந்தினர் மற்றும் முதல்வர் அவர்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும், பார்வையாளருக்கும் மாணவர்கள் செய்து, நடித்து காண்பித்தனர். பல மாணவர்கள் பெற்றோர்கள் கண்முன் தங்கள் குழந்தைகளின் திறமையை கண்டு களிக்க இது பெரிதும் உதவியதாகவும் சிறப்பு மிக்கதாகவும் இருந்ததாக கூறினார்கள்.

இதில் சிறந்து விளங்கிய பல அரங்குகளுக்கு சான்றுகளும் பதக்கங்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# தமிழகத்தில் அதிக வாக்காளர்கள் நீக்கம்?

## மக்கள் அதிர்ச்சி!



பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்ட நிலையிலும், பீஹாரை விட தமிழகத்தில் வாக்காளர்கள் அதிகளவில் நீக்கப்பட்டு உள்ளனர்.

சட்டசபை தேர்தல் நடக்கவுள்ள பல்வேறு மாநிலங்களில், எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை, தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில் சட்டசபை தேர்தல் முடிந்த பீஹார் மாநிலத்திலும் எஸ்.ஐ.ஆர்., பணிகள் நடந்தன.

அங்கு வாக்காளர் கணக்கெடுப்பு பணிக்கு முன், 7.89 கோடி வாக்காளர்கள் இருந்தனர். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்டபோது, 7.24 கோடி வாக்காளர்கள் இருந்தனர். அதன்படி, 65 லட்சம் பேர், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. கணக்கெடுப்பு பணிகள் துவங்கும் முன், 6.41 கோடி வாக்காளர்கள் இருந்தனர். தற்போது 5.43 கோடி பேர் உள்ளனர்; 97.38 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். பீஹாரில் எஸ்.ஐ.ஆர்., பணியின் போது பல்வேறு கெடுபிடிகள் விதிக்கப்பட்டன. தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர்., கணக்கெடுப்பு பணியின்போது, வாக்காளர்களுக்கு பல வகைகளிலும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அதையும் மீறி, பீஹாரை விட தமிழகத்தில் அதிகளவில் வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளது தமிழக வாக்காளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## ரோட்டரி நேரம்

### திருச்சியில் உள்ள ரோட்டரி கிளப்ஸ் சார்பில் நடைபெற்ற

# குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சியில் ரோட்டரி கிளப் ஆப் திருச்சி நெக்ஸ்ட் ஜென் குழந்தைகள் நலத்துறை உடன் ரோட்டரி கிளப் ஆப் திருச்சிராப் பள்ளி பட்டர்பிளைஸ் ரோட்டரி கிளப் திருச்சி ரிவர் டவுன் மற்றும் ரோட்ராக்ட் கிளப் ஆப் ஹோலி ரெடிமேட்ஸ் நடுநிலைப்பள்ளி இணைந்து குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடைபெற்றது. விழாவில் தொடக்கமாக ரோட்டரி கிளப் திருச்சி நெக்ஸ்ட் ஜென் தலைவர் ரொட்டேரியன் அப்துல் ரஹீம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு விருந்தினராக பனானா லீப் உரிமையாளர் ரொட்டேரியன் மனோகரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட குழந்தைகள் அழகு அலெக்ஸ் அவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பு அழைப்பாளராக எழில் நிலவன், தலைமை ஆசிரியை ஜாக்குலின், கிளப் அட்வைஸ்சர் டியூக் உள்ளிட்ட கலந்து கொண்டார்கள்.



இந்த நிகழ்ச்சியில் ரோட்டரி கிளப் திருச்சி நெக்ஸ்ட் ஜென் செயலாளர் ரொட்டேரியன் கோபி கிருஷ்ணன் ஒருங்கிணைப்பாளர் ரொட்டேரியன் தீபன் ரோட்டரி கிளப் திருச்சிராப்பள்ளி பட்டர்ஃபிளைஸ் தலைவர் நித்தியா செயலாளர் ரேவதி ரோட்டரி கிளப் ஆப் திருச்சி ரிவர் டவுன் தலைவர் வினோத் முன்னாள் தலைவர் டேனியல் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.

### திருவண்ணாமலையில் திருச்சிராப்பள்ளி ரோட்டரி சங்கங்கள் சார்பாக நடைபெற்ற

# தீபம் தரிசனம், ரோட்டரி மாவட்டங்கள் சந்திப்பு மற்றும் கொடி பரிமாற்றம் நிகழ்ச்சி



திருவண்ணாமலையில் ரோட்டரி சார்பாக பல ரோட்டரி மாவட்டங்கள் சந்திப்பு மற்றும் தீப தரிசனம் நிகழ்ச்சியில் திருச்சியில் இருந்து ரோட்டரி கிளப் ஆப் திருச்சி நெக்ஸ்ட் ஜென், திருச்சிராப்பள்ளி பட்டர் பிளேஸ், ரோட்டரி கிளப் திருச்சி டைமண்ட் சிட்டி குயின்ஸ், ரோட்டரி கிளப் ஆப் திருச்சி ரிவர் டவுன் உள்ளிட்ட சங்கங்கள் கலந்து கொண்டு சிறப்பாக நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ரோட்டரி இன் சர்வதேச இயக்குனர் ரொட்டேரியன் முருகானந்தம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீலங்கா மலேசியா சிங்கப்பூர் உள்ளிட்ட அயல்நாடுகள் மற்றும் பல்வேறு மாநில அளவிலான நிகழ்ச்சி திருவண்ணாமலையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு கேரளா கர்நாடகா ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ரோட்டரி தலைவர்கள் செயலாளர்கள் உறுப்பினர்கள் வருகை தந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் அனைத்து சங்க தலைவர்களும் ஒருவருக்கொருவர் இடையே சங்க கொடியை பரிமாறிக் கொண்டு நட்பு உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். சிஸ்டர் கிளப் இன்னும் சங்கம் இடையே புத்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதில் திருச்சியில் இருந்து ரோட்டரி கிளப் திருச்சி நெக்ஸ்ட் ஜென் தலைவர் ரொட்டேரியன் அப்துல் ரஹீம் செயலாளர் கோபி கிருஷ்ணன், ரோட்டரி கிளப் திருச்சிராப்பள்ளி பட்டர் ப்ளீஸ் தலைவர் நித்தியா ரோட்டரி கிளப் டைமண்ட் சிட்டி குயின்ஸ் தலைவர் மாரி கண்ணு செயலாளர் சரண்யா ரோட்டரி கிளப் திருச்சி ரிவர் டவுன் தலைவர் வினோத் முன்னாள் தலைவர் டேனியல் உள்ளிட்ட சங்கங்கள் கலந்து கொண்டு 75க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இருந்து கொடிகளை பரிமாறிக் கொண்டார்கள்.

# ஆதி திராவிடர் நல தொடக்கப்பள்ளிக்கு இலவச மேஜை நாற்காலி வழங்கிய

## ரோட்டரி கிளப் திருச்சி ரிவர் டவுன்



திருச்சியில் ரோட்டரி கிளப் ரிவர் டவுன் ஆலத்தூர் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு மேஜை நாற்காலி உள்ளிட்ட உபகரணங்களை வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக சங்கத் தலைவர் வினோத் குமார் அனைவரையும் வரவேற்றார். 35000 மதிப்புள்ள மேஜை நாற்காலிகள் பள்ளிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு 18.11.2025 அன்று திருச்சி ஆலந்தூரில் உள்ள ஆதி திராவிடர் நல துவக்கப் பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முசிறி St.டோமினிக் சேவியோ பள்ளி குழும தாளாளர் Rtn.V.S.எமர்சன் ஜெல்சிங், மற்றும் Rtn.J.சரவணன், Rtn.R.B.கார்த்திகேயன், Rtn.பாரதி, Rtn.அலெக்ஸ் மைக்கேல், Rtn.சரவணன், முன்னாள் தலைவர் Rtn.டேனியல், Rtn.விமலா தேவி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இதில் ரோட்டில போ திருச்சி ரிவர் டவுன் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டார்கள். 100-க்கும் மேற்பட்ட மாவட்ட மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

## வரலாற்றில்

# டிசம்பர் மாதம்

டிசம்பர் (December) என்பது ஆங்கில நாட்காட்டியின் பன்னிரண்டாவது மற்றும் கடைசி மாதமாகும், இது 31 நாட்களைக் கொண்டது, மேலும் இது இலத்தீன் மொழியில் 'பத்து' என்று பொருள்படும் 'decem' என்ற சொல்லிலிருந்து வந்தது, ஏனெனில் இது ரோமானிய நாட்காட்டியில் பத்தாவது மாதமாக இருந்தது; கிறிஸ்துமஸ் பண்டிகை போன்ற முக்கிய நிகழ்வுகளும் இம்மாதத்தில் கொண்டாடப்படுகின்றன

மனித உரிமைகள் தினம், யுனிசெஃப் தினம், உலக புடவை தினம் மற்றும் ஆல்பிரட் நோபலின் நினைவு தினம் ஆகியவை டிசம்பர் மாதத்தில் அனுசரிக்கப்படும்

டிசம்பர், இந்தியாவில் நல்ல தட்பவெட்பம் நிலவும் மாதங்களுள் ஒன்று. குளிர் காலத்தின் வாசலாக இருக்கும் இம்மாதத்தில் தான் நம்நாட்டில் பல முக்கியமான திருவிழாக்கள் மற்றும் மதம் சார்ந்த பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. பல கலாச்சாரங்கள் மற்றும் மதங்களின் இனிய சங்கமமாக திகழும் நம் நாட்டில் கொண்டாடப்படும் இது போன்ற விழாக்களில் பங்குகொள்வது மிக மிக வித்தியாசமான அனுபவமாக நமக்கு அமையும்.

டிசம்பர் மாதத்தில் பல முக்கிய உலக மற்றும் இந்திய வரலாற்று நிகழ்வுகள் நடந்துள்ளன, இதில் 1941-ல் பியர்ல் துறைமுகத் தாக்குதல், 1955-ல் ரோசா பார்க்ஸ் போராட்டம், 1967-ல் முதல் மனித இதய மாற்று அறுவை சிகிச்சை, 1998-ல் பில் கிளிண்டன் பதவி நீக்க விசாரணை, மற்றும் 2004-ல் சுனாமி போன்ற நிகழ்வுகளும், அடங்கும். உலக அளவில், 1989-ல் பனிப்போர் முடிவுக்கு வந்தது, 1804-ல் நெப்போலியன் பேரரசரானார், 1901-ல் முதல் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன போன்ற நிகழ்வுகளும் இந்த மாதத்தில் நடந்தவை.

டிசம்பர் மாத முக்கிய வரலாற்று நிகழ்வுகள்:

டிசம்பர் 1 (1955): ரோசா பார்க்ஸ், நிறவெறிக்கு எதிராக பேருந்தில் தனது இருக்கையை மறுத்து, அமெரிக்காவில் குடிமை உரிமைகள் இயக்கத்தைத் தூண்டினார்.

டிசம்பர் 2 (1804): நெப்போலியன் போனாபார்ட் பிரான்ஸ் பேரரசராக முடிசூடினார்.

டிசம்பர் 3 (1967): கிறிஸ்டியன் பர்னார்ட், உலகின் முதல் மனித இதய மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்தார்.

டிசம்பர் 5 (2013): தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா காலமானார்.

டிசம்பர் 7 (1941): ஜப்பான், அமெரிக்காவின் பியர்ல் துறைமுகத்தில் தாக்குதல் நடத்தியது, இது இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவின் நுழைவுக்கு வழிவகுத்தது.

டிசம்பர் 8 (1980): முன்னாள் பீட்டில்ஸ் இசைக்குழு உறுப்பினர் ஜான் லெனான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

டிசம்பர் 11 (1936): இங்கிலாந்து மன்னர் எட்வர்ட் ணுணுணு, தனது காதலுக்காக அரியணையைத் துறந்தார்.

டிசம்பர் 16 (1773): பாஸ்டன் தேநீர் விருந்து (Boston Tea Party) நடைபெற்றது.

டிசம்பர் 19 (1998): அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் மீது பதவி நீக்க விசாரணையை அமெரிக்க பிரதிநிதிகள் சபை தொடங்கியது.

டிசம்பர் 21 (1988): லோகர்பி விமான வெடிகுண்டு தாக்குதல் நிகழ்ந்தது.

டிசம்பர் 25 (1914): முதல் உலகப் போரின் போது, கிறிஸ்துமஸ் காலத்தில் 'கிறிஸ்துமஸ் போர்நிறுத்தம்' ஏற்பட்டது.

டிசம்பர் 26 (2004): இந்தியப் பெருங்கடலில் பயங்கர சுனாமி பேரழிவு ஏற்பட்டது. இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன

டிசம்பர் 30 (1922): சோவியத் யூனியன் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது.

### ரோட்டரி மற்றும் இன்னர்வீல் கிளப் சார்பில்

# திருச்சியில் 10 நாட்களில் 101 நலத்திட்டங்கள்!



திருச்சி நெக்ஸ்ட் ஜென், திருச்சியில் ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி டைமண்ட் சிட்டி எலைட் இன்னர்வீல் கிளப் ஆஃப் திருச்சி ராக்போர்ட், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சிராப்பள்ளி, ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி ரிவர்டவுன், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி மெட்ரோ பாலிட்டன், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி ட்ரீமர்ஸ், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி மெஜெஸ்டிக், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி பட்டர்ஃபிளைஸ், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி டைனமிக், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி ராயல், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி தென்றல், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி பீனிக்ஸ், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி டிசி குயின்ஸ், ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி ஐ டொனேஷன் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி ஜம்புகேஸ்வரம் ஆகிய சங்கங்கள் இணைந்து நடத்தும் 'ட்ரீம் டிசம்பர்' எனும் பிரம்மாண்ட சமூக சேவை திருவிழா கோலாகலமாகத் தொடங்கி நடைபெற்றது.

10 நாட்களில் 101 சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வின் தொடக்கமாக, திருவானைக்காவல் அம்மா மண்டபம் அருகில் 'கர்ப்பப்பை வாய் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி' நடைபெற்றது.

இப்பேரணியை ரோட்டரி மாவட்ட ஆளுநர் (RID 3000) Rtn. J.கார்த்திக் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பேரணியின் நிறைவாக கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற விழாவில், ரோட்டரி கிளப் ஆப் திருச்சிராப்பள்ளி டைமண்ட் சிட்டி தலைவர் ஜோசப் ராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட மருத்துவர் Dr.சசிபிரியா கோவிந்தராஜ் அவர்கள், பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை வாய் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது எப்படி மற்றும் தடுப்பு முறைகள் குறித்து மாணவிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சி இறுதியில் ரோட்டரி கிளப் திருச்சி நெக்ஸ்ட் ஜென் தலைவர் ரொட்டேரியன் அப்துல் ரஹீம் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கு ரோட்டரி கிளப் ஆஃப் திருச்சி டைமண்ட் சிட்டி எலைட் தலைவர் யூமிஜ. னி. ஜோசப் ராஜ் மற்றும் இன்னர்வீல் கிளப் ஆஃப் திருச்சி ராக்போர்ட் தலைவர் திருமதி. மார்கரெட் ஜோசப் ராஜ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

10 நாளில் பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளப் செயலாளர் Rtn. T. சுப்பிரமணியன், இன்னர்வீல் செயலாளர் திருமதி. பிரியா காசிவிஸ்வநாதன், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

பல்வேறு அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வு செய்திகளை தாங்கி வெளிவரும் நமது
லட்சியம் வெல்லும் மாத இதழ்
ஒவ்வொரு மாதமும் உங்கள் இல்லம் தேடி வர
இப்பொழுதே சந்தாதாரராகுங்கள்

சந்தா தொகையினை, நேரடியாக வங்கி கணக்கிலோ, DD-யாகவோ அல்லது G-pay மூலமாகவோ செலுத்தலாம்

வருட சந்தா ரூ. 240 மட்டுமே!

A/C NAME: LATCHIYAM VELLUM
A/C No: 6807683907 (current account)
IFSC : IDIB000C067
Indian bank : Trichy crowford branch
Gpay : 9943483046 (LATCHIYAM TV)



2/48சி, சம்பூர்தி காம்ப்ளக்ஸ்,
2-வது தளம், பொன்னகர்,
திருச்சி - 620 001
செல்: 9443852805

# SIR.. உங்க பெயர்...

## இருக்கா இல்லையா? நீக்கப்பட்டுவிட்டதா? எப்படி கண்டுபிடிப்பது?

### எளிய முறை!



SIR பணிகள் தமிழ்நாடு முழுக்க தீவிரமாக நடந்து முடிந்துள்ளது. தற்போது வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகி உள்ளது. இதில் உங்கள் பெயர் இடம்பெற்று உள்ளதா அல்லது நீக்கப்பட்டு உள்ளதா என்பதை எளிதாக ஆன்லைனில் காண முடியும்.

SIR என்பது, தகுதியற்ற வாக்காளர்களை நீக்கி, உண்மையான வாக்காளர்களைச் சேர்ப்பதன் மூலம் வாக்காளர் பட்டியலின் உண்மைத் தன்மையை பராமரிக்க, காலங்காலமாக மேற்கொள்ளப் படும் ஒரு விரிவான சரிபார்ப்பு செயல்முறையாகும். கடைசியாக 2002-2004ல் இந்த பணிகள் நடந்தது.

இது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் கியானேஷ் குமார், பல தசாப்தங்களாக, 'கிட்டத்தட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் வாக்காளர் பட்டியலின் மோசமான தன்மை குறித்து தொடர்ந்து புகார் கூறி வருகின்றன' என்று தெரிவித்தார். 1951 மற்றும் 2004-க்கு இடையில் தேர்தல் ஆணையம் எட்டு SIR பணிகளை மேற்கொண்டது; கடைசியாக 2002-04 இல் நடைபெற்றது.

தற்போதைய இரண்டாம் கட்டப் பணியானது அந்தமான் & நிக்கோபார் தீவுகள், சத்தீஸ்கர், கோவா, குஜராத், கேரளா, லட்சத்தீவு, மத்தியப் பிரதேசம், புதுச்சேரி, ராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கியது.

இந்திய தேர்தல் ஆணையம், வாக்குப்பதிவு சிறப்பு சுருக்கத் திருத்தப் பணி காலக்கெடுவை ஒரு வாரம் நீட்டித்தது. கடந்த நவம்பர் மாதம் 4-ந் தேதி இந்த பணிகள் தொடங்கியது. தமிழ்நாட்டில் கடந்த 2002-ம் ஆண்டுக்கு பிறகு தற்போது வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு உள்ளது. எஸ்.ஐ.ஆர் பணிகளில் தமிழகத்தில் 68,470 வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள், அதாவது பிஎல்.ஓக்கள் ஈடுபட்டனர். கடந்த வாரம் முடிய வேண்டிய பணிகள் 1 வாரம் நீட்டிக்கப்பட்டு இந்த வாரம் நிறைவு பெற்றது.

SIR பணிகளுக்கு பின் உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதைச் சரிபார்க்க, மக்கள் ECI இணையதளம் அல்லது அந்தந்த மாநிலத் தேர்தல் ஆணையங்களின் இணைய தளங்களைப் பயன் படுத்தலாம்.

வாக்காளர் பட்டியலில் பெயரைச் சரிபார்க்கும் அடிப்படை வழிமுறைகள் இங்கே:

1. voters.eci.gov.in அல்லது electoralsearch.eci.gov.in என்ற ECI இணையதளத்திற்குச் செல்லவும்.

2. உங்கள் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) எண்ணை உள்ளிடவும். உங்கள் பெயர், வயது மற்றும் தொகுதி போன்ற தனிப்பட்ட விவரங்களையும் உள்ளிடலாம்.

3. பின்னர் 'தேடல்' பொத்தானை அழுத்தி உங்கள் வாக்காளர் விவரங்களைக் காணலாம்.

மாற்றாக, நீங்கள் nvsp.in என்ற தேசிய வாக்காளர் சேவை இணையதளத்தைப் (NVSP) பார்வையிடலாம்.

1. NVSP போர்ட்டலில் 'வாக்காளர் பட்டியலில் தேடு' (Search in Electoral Roll) விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

2. உங்கள் EPIC எண் அல்லது தனிப்பட்ட விவரங்களை உள்ளிடுமாறு கேட்கப்படும் படிகளைப் பின்பற்றவும்.

3. 'தேடு' என்பதைக் கிளிக் செய்தவுடன், உங்கள் விவரங்கள் போர்ட்டலில் தோன்றும்.

உங்கள் பெயர் பட்டியலில் இல்லையென்றால் என்ன செய்வது?

உங்கள் பெயர் அல்லது விவரங்கள் விடுபட்டிருந்தால் அல்லது தவறாக இருந்தால், நீங்கள் nvsp.in ஐப் பார்வையிடலாம் அல்லது புதிய பதிவுக்கான படிவம் 6 அல்லது திருத்தங்களுக்கான படிவம் 8 ஐப் பூர்த்தி செய்ய வாக்காளர் உதவி எண் செயலி (Voter Helpline App) அல்லது ECINET செயலியைப் பயன்படுத்தலாம். விண்ணப்பத்திற்கு சில ஆவணங்களை நீங்கள் தயாராக வைத்திருக்க வேண்டி இருக்கலாம்.




























செய்தி நேரம்

மலர் 4 இதழ் 19 டிசம்பர் 16-31, 2025

ஆசிரியர்-வெளியீட்டாளர்
பேரா. சு.சதாசிவம் M.A., B.Ed., M.Phil.,

நிர்வாக ஆசிரியர்
A.மணிகண்டன்

இணை ஆசிரியர்
A.ஐசக் அருள்ராஜ்

உதவி ஆசிரியர்
S.குமரேசன்

துணை நிர்வாக ஆசிரியர் & விளம்பர மேலாளர்
ஜனனி அழகிரி

நிருபர்கள்
S.வேல்முருகன், J.ராஜசேகரன்
பிளட் A.ஷாம், G.இமானுவேல்,
V.முத்தீஸ்வரன், S.தினேஷ்

கௌரவ சட்ட ஆலோசகர்:
Dr. ரெ. ராமச்சந்திரன்
சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை.

சட்ட ஆலோசகர்கள்!
வழக்கறிஞர் R.சரவணன் M.L., உயர்நீதிமன்றம் சென்னை
மூத்த வழக்கறிஞர் J.மதியழகன் B.A.B.L.,

பக்க வடிவமைப்பு: Rathna Graphics

செய்தி நேரம்
முகவரி: எண்: 248 சி. சம்பூர்த்தி காம்ப்ளெக்ஸ்,
2வது தளம், பொன்னகர், திருச்சி-620 001.
Cell: 94438-52805, 99434-83046
E Mail: seithineram@gmail.com


Printed by S.Balasubramanian and Published by S.Sathasivam on behalf of S.Sathasivam and Printed at Sankarji Computer Graphics Printer, No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk), Karur (District)-639 105. and Published at No.5/185, Thiruvalarchipatti, Airport (Post), Tiruchirappalli-620 007. E-mail : seithineramtry@gmail.com
Editor: S.SATHASIVAM